# குடும்ப நீதிமன்றங்களில்

## மத்தியஸ்தம் மற்றும் ஆலோசனை

அவசிய கூறுகள்



# பொருளடக்கம்


01 முகவுரை

02 குடும்ப நீதிமன்றங்களில் மத்தியஸ்தம் மற்றும் ஆலோசனை என்றால் என்ன?

03 குடும்ப சர்ச்சைத் தீர்வு பிரிவில் (எஃப்டிஆர்) மத்தியஸ்தம் மற்றும் ஆலோசனையை ஏன் பயன்படுத்த வேண்டும்?

05 மத்தியஸ்தம் மற்றும் ஆலோசனைக்காகப் பரிந்துரைக்கப்படும் வழக்குகள் எவ்வாறு எஃப்டிஆர்-இல் கையாளப்படுகிறது என்பதைப் பற்றிய மேற்பார்வை

06 ஆலோசனை செயல்முறை

09 மத்தியஸ்த செயல்முறை

11 மத்தியஸ்தத்திற்குப் பிறகு நடப்பதென்ன?

12 விவாகரத்தின்போதும் அதன் பிறகும் கூட்டு பிள்ளை வளர்ப்பு சம்பந்தமான உதவிக் குறிப்புகள்

13 பயனுள்ள தொடர்புகள்



**பொறுப்பு விலகல்**

- விளக்க வரைபடங்கள் வழக்கமான செயல்முறைகளை மட்டுமே பிரதிநிதிக்கின்றன. ஒவ்வொரு விவாகரத்து வழக்கிலும், அதன் தன்மைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு ஆகச்சிறந்த வழிமுறையைக் கையாள்வதற்கு வழக்கின் எத்தருணத்திலும் நீதிபதிக்கு முழு விருப்புரிமை அதிகாரம் உண்டு.
- இந்த வெளியீடு பொது தகவலுக்கு மட்டுமே.
- குடும்ப நீதிமன்றங்கள் (FJC) இவ்வெளியீட்டினுடைய பொருளடக்கத்துடன் தொடர்பான எந்த மற்றும் அனைத்து கடப்பாடுகளிலிருந்தும் தனது பொறுப்பினை துறக்கின்றது.
- ஐயம் இருந்தால், எப்போதுமே சட்ட ஆலோசனையை நாடவும்.




# முகவுரை

குடும்ப நீதிமன்றங்கள் (எஃப்ஜேசி) விவாகரத்து, பிரிதல் மற்றும் பிள்ளைகள் சம்பந்தமான விவகாரங்கள் பொருட்டு சட்டரீதியான செயல்முறைகளை எதிர்நோக்கும் குடும்பகளுக்கு உதவ பல்வேறு சர்ச்சைத் தீர்வு செயல்முறைகளைக் கையாளுகிறது.

இதுபோன்ற வழக்கு நடவடிக்கைகளில் குடும்ப சர்ச்சைகள் பொதுவாக உணர்ச்சிவசமானதாகவே இருக்கும். தீர்வு காண விசாரணைக்குச் செல்ல நேரிட்டால் அது செலவுகள் அதிகம் கொண்டதாகவும் மன உளைச்சல் ஏற்படுத்த கூடியதாகவும் இருக்கும். வழக்கில் சம்பந்தபட்ட பெற்றோர்கள் மற்றும் தாத்தா பாட்டி போன்ற தரப்பினர்கள் தொடர்ந்து குடும்ப உறுப்பினர்களாக இருந்துகொண்டிருக்கும் வேளையில் சட்ட செயல்முறைகளால் இவர்களுக்கிடையே உள்ள உறவுகள் குறித்த எல்லா சர்ச்சைகளையும் தீர்க்க இயலாது.

ஆகவே இதுபோன்ற செயல்முறைகளில், ஆக முந்திய சந்தர்பத்திலேயே குடும்பங்கள் தங்கள் உறவு மற்றும் சட்ட சர்ச்சைகளைத் தீர்க்க மத்தியஸ்தம் மற்றும் ஆலோசனையை எஃப்ஜேசி கையாளும்.

எஃப்ஜேசி-யின் குடும்ப சர்ச்சைத் தீர்வு பிரிவால் (எஃப்டிஆர்) நடத்தப்படும் மத்தியஸ்தம் மற்றும் ஆலோசனை செயல்முறைகளின் வழிகாட்டியை இந்தக் கையேடு வழங்குகிறது.

# குடும்ப நீதிமன்றங்களில் மத்தியஸ்தம் மற்றும் ஆலோசனை என்றால் என்ன?



விவாகரத்து வழக்கில் ஈடுபட்டிருக்கும் பெற்றோர்கள், 21 வயதிற்கும் அதற்கும் குறைவான வயதுடைய குறைந்தது ஒரு பிள்ளையாவது கொண்டிருந்தால், குடும்ப சர்ச்சைத் தீர்வு (எஃப்டிஆர்) பிரிவில் மத்தியஸ்தம் மற்றும் ஆலோசனையில் கலந்துக்கொள்ள வேண்டும். இங்குதான் தரப்பினர்களும் அவர்களது வழக்கறிஞர்களும் மத்தியஸ்தத்திற்காக நீதிமன்றம் நியமித்த மத்தியஸ்தரை சந்திப்பர். மேலும், விவாகரத்தில் ஏதேனும் கருத்து வேறுபாடுகள் இருந்தால், அதைத் தீர்க்க ஆலோசனை மற்றும் உளவியல் சேவைகளிலிருந்து நீதிமன்ற குடும்ப நிபுணர் ஒருவரையும் சந்திப்பர். இது பிள்ளைகளின் வசிக்கும் ஏற்பாடுகள், பராமரிப்பு மற்றும் திருமண சொத்து/ஆஸ்தி பங்கு பிரித்தல் போன்ற விவகாரங்களையும் உள்ளடக்கும்.

மற்ற அனைத்து வழக்குகளுக்கும் தரப்பினர்கள் மத்தியஸ்தம் மற்றும்/அல்லது ஆலோசனைக்காக சுயமாய் கோரிக்கை விடுக்கலாம். மத்தியஸ்தம் மற்றும்/அல்லது ஆலோசனை பலனளிக்கும் என்று நீதிமன்றம் கருதும்போது, தரப்பினர்களை இதுபோன்ற அமர்வுகளில் கலந்துக்கொள்ள நீதிமன்றம் வலியுறுத்தும். இது சர்ச்சைகளை இணக்கமாக தீர்க்கும் நோக்கத்தில் செய்யப்படுகிறது.



# குடும்ப சர்ச்சைத் தீர்வு பிரிவில் (எஃப்டிஆர்) மத்தியஸ்தம் மற்றும் ஆலோசனையை ஏன் பயன்படுத்த வேண்டும்?

எஃப்டிஆர்-இல் விவாகரத்து, பிரிதல் மற்றும் பிள்ளை குறித்த விவகாரங்கள் பொருட்டு வழங்கப்படும் மத்தியஸ்தம் மற்றும் ஆலோசனை செயல்முறைகள் தரப்பினர்களுக்கு கண்ணியமான மற்றும் பாதுகாப்பான சூழலில் பரஸ்பரமாக கலந்தாலோசிக்க வாய்ப்புகளை வழங்குகிறது. எங்கு சாத்தியபடுமோ, கீழ்கண்ட விஷயங்களில் அவர்கள் ஓர் ஒப்பந்தத்திற்கு வரலாம்:



## பாதுகாப்புப் பொறுப்பு

பிள்ளையின்/பிள்ளைகளின் வாழ்வு சம்பந்தமான முக்கிய முடிவுகள் எடுக்கும் பொறுப்பு யாருடையது.



## பேணும் பொறுப்பு

தினசரி அடிப்படையில் யார் பிள்ளை/பிள்ளைகளை பராமரிப்பது.



## காணும் உரிமை

பேணுதல் பொறுப்பு கொடுக்கப்படாத தரப்பினர் எத்தனை முறை பிள்ளை/பிள்ளைகளை காண்பது.



## பராமரிப்பு

ஒவ்வொரு தரப்பும் அவரது முன்னாள் வாழ்க்கைத் துணை மற்றும்/அல்லது பிள்ளை/பிள்ளைகளின் அன்றாட வாழ்க்கைச் செலவுகளுக்கு எவ்வளவு பங்களிக்க வேண்டும்



## திருமண சொத்து/ஆஸ்தி

திருமணத்தின்போது வாங்கிய எல்லா சொத்தும்/ஆஸ்தியும் எவ்வாறு தம்பதிகளுக்கிடையே பிரிப்பது.

# குடும்ப சர்ச்சைத் தீர்வு பிரிவில் (எஃப்டிஆர்) மத்தியஸ்தம் மற்றும் ஆலோசனையை ஏன் பயன்படுத்த வேண்டும்? (cont'd)

## எஃப்டிஆர்-இல் மத்தியஸ்தம் மற்றும் ஆலோசனையின் பலன்கள்



தரப்பினர்கள் சட்டப் போராட்டத்தில் விரோதிகளாக இருப்பதற்கு பதிலாக கூட்டு பெற்றோர்களாக கலந்துரையாடல் மற்றும் பேச்சுவார்த்தைகளின் மூலம் அவர்களுக்கிடையே உள்ள சர்ச்சைகளைத் தீர்ப்பதற்குக் கற்றுக்கொள்ளலாம்



பிள்ளைகள் மீது விவாகரத்து ஏற்படுத்தும் தாக்கத்தை பற்றி தரப்பினர்கள் கற்றுக்கொள்வதோடு அவர்கள் பிள்ளை வளர்ப்புத் திட்டங்களைக் கலந்தாலோசிக்கும்போது பிள்ளைகளின் தேவைகள் மீதும் கவனம் செலுத்தலாம்.



தரப்பினர்களும் பிள்ளைகளும் ஆறுதலளிக்கும் உதவிகளைப் பெறுவதோடு சமூக வளங்களுக்கும் பரிந்துரைக்கப்படுவர்.



எஃப்ஜேசி-யில் நடக்கும் மத்தியஸ்தமும் ஆலோசனையும் எந்தவித கட்டணமும் இல்லா சேவைகள் ஆகும். பணத்தை மட்டுமே சர்ச்சைக்குரிய அம்சமாக கொண்டிருக்கும் வழக்குகளில் மற்றும் அதில் கணிசமான அளவு சொத்துகள் சம்பந்தப்பட்டிருந்தால், அவ்வகையான வழக்குகள் தனியார் மத்தியஸ்தத்திற்கு பரிந்துரைக்கப்படும். இங்கு கட்டணம் சந்தை விகிதங்களுக்கு உட்பட்டது.

**இரகசியத்தன்மை:**

- மத்தியஸ்தம் மற்றும் ஆலோசனையின்போது கலந்துரையாடப்படும் அனைத்து தகவல்களும் இரகசியமானவை. வழக்கு விசாரணைக்குச் சென்றால் மத்தியஸ்தம் மற்றும் ஆலோசனையின்போது தரப்பினர்கள் கூறியது மற்றும் வழங்கிய ஆவணம் எதையும் சான்றாகப் பயன்படுத்த முடியாது. விசாரணையின்போது அவர்கள் காணும் நீதிபதியும் மத்தியஸ்த செயல்முறையின்போது காணும் நீதிபதி-மத்தியஸ்தரும் வெவ்வேறு நபர்களாக இருப்பர்.



# மத்தியஸ்தம் மற்றும் ஆலோசனைக்குப் பரிந்துரைக்கப்படும் வழக்குகள் எவ்வாறு எஃப்டிஆர்-இல் கையாளப்படுகிறது என்பதைப் பற்றிய மேற்பார்வை

### படி 1: குடும்ப சர்ச்சைத் தீர்வு சந்திப்பு

**மத்தியஸ்தம் மற்றும் ஆலோசனைக்கு நிகழ்ச்சி நிரலை அமைத்தல்**
குடும்ப சர்ச்சைத் தீர்வு சந்திப்பில் என்ன நடக்கும்?

கருத்து வேறுபாடுகள் உள்ள தரப்பினர்கள் அவர்களுக்கு வழக்கறிஞர்கள் எவரேனும் இருந்தால் அவர்களுடன் சேர்ந்து நீதிபதி மற்றும் சீஎஃப்எஸ் ஒருவரை சந்திப்பர்

நீதிபதி மற்றும் சீஎஃப்எஸ் கருத்து வேறுபாடுகள் கொண்ட விவகாரங்களைத் தெளிவுபடுத்துவதுடன் மத்தியஸ்தம் மற்றும் ஆலோசனைக்கான நிகழ்ச்சி நிரலையும் அமைப்பார்கள்.

நீதிபதி மத்தியஸ்தத்திற்கு அல்லது கூட்டு மத்தியஸ்தத்திற்கு நாள் குறிப்பார்.

### படி 2: ஆலோசனை

மாநாட்டின் முடிவில் தரப்பினர்கள் சீஎஃப்எஸ் -வுடன் முதல் அமர்வில் கலந்துக்கொள்வார்கள். தேவைப்படுமெனில் சீஎஃப்எஸ் தொடர்ந்துவரும் ஆலோசனை அமர்வுகள் மூலம் தொடர்பில் இருப்பார்.

### படி 3: மத்தியஸ்தம்/கூட்டு மத்தியஸ்தம்

மத்தியஸ்தம்/கூட்டு மத்தியஸ்தத்தின்போது தரப்பினர்கள் மற்றும் அவர்களது வழக்கறிஞர்கள் மத்தியஸ்தரைச் சந்தித்து சர்ச்சைக்குரிய விவகாரங்களைப் பற்றி கலந்து ஆலோசிப்பர்.

### படி 4: மத்தியஸ்தம் முடிவு பெறுதல்

உடன்பாடு காணும் பட்சத்தில் ஒப்புதல் உத்தரவு ஒன்று வரையப்பட்டு நீதிபதியால் பதிவுசெய்யப்படும்.

உடன்பாடு காணா பட்சத்தில் தரப்பினர்கள், விசாரணைக்கு தயார் செய்யும் செயல்முறை உத்தரவுக்காக நீதிபதி ஒருவரிடம் அனுப்பப்படுவர்.

# ஆலோசனை செயல்முறை

தேர்ச்சிப் பெற்ற மற்றும் அனுபவம் வாய்ந்த மனநல சுகாதார தொழில் வல்லுநர்களாக திகழும் நீதிமன்ற குடும்ப நிபுணர்கள் (சீஎஃப்எஸ்) இரகசிய தன்மையை பராமரித்து பெற்றோர்களுக்கு மற்றும் எங்கெங்கே பொருந்துகின்றதோ பிள்ளை/பிள்ளைகளுக்கும் ஆலோசனை வழங்குவர். இந்த அமர்வுகள் பெற்றோர்களுக்கு கீழ்வருமாறு உதவ முனைகிறது:

- குடும்பத்திற்கும் பிள்ளை/பிள்ளைகளுக்குமான முக்கியம் என கருதப்படும் பிரச்சினைகளை அடையாளம் காணுதல்
- அடிப்படையாக திகழும் முரம்பாடுகளைத் தீர்த்தல்
- சிரமமான துன்பம் தருகிர உணர்ச்சிகளைச் சமாளிக்க திறன்களை வளர்த்துக்கொள்ளுதல்
- பிள்ளை/பிள்ளைகளின் தேவைகள் தொடர்பாக பெற்றோர்கள் அவர்களுக்கிடையே திறம்பட தொடர்பு கொள்தல்
- தங்கள் பிள்ளை/பிள்ளைகளுக்கான இடைக்கால மற்றும் எதிர்கால பராமரிப்பு ஏற்பாடுகள் குறித்து ஒருமித்த கருத்தை உருவாக்குதல்

## என்ன எதிர்பார்க்கலாம்



விவாகரத்து வழக்கில் சம்பந்தப்பட்ட தரப்பினர்கள் மட்டுமே கலந்துக்கொள்ள தேவைப்படும். அதாவது தம்பதியினர் மற்றும் அவர்கள் பிள்ளை/பிள்ளைகள். வழக்கின் தேவைக்கேற்ப தம்பதியினரை மற்றும் பிள்ளை/பிள்ளைகளை கூட்டாக அல்லது தனித்தனியாக நீதிமன்ற குடும்ப நிபுணர் சந்திப்பார். வழக்கறிஞர்கள் கலந்துக்கொள்ள தேவையில்லை.

சீஎஃப்எஸ் பொருத்தமான வேளைகளில் தரப்பினர்களின் பிள்ளை/பிள்ளைகளுடன் சந்திக்கக் கோரலாம். பெற்றோர்களின் பிரிதல் மற்றும் சர்ச்சைகள் பற்றிய பிள்ளை/பிள்ளைகளின் அனுபவத்தைப் புரிந்துகொள்வதற்கும் அவர்களின் தேவைகளை மதிப்பிடுவதற்கும் சீஎஃப்எஸ் பிள்ளை/பிள்ளைகளை வேறொரு தனி அமர்வில் சந்திப்பார்.





இந்த தனி அமர்வில் சீஎஃப்எஸ் பிள்ளை/பிள்ளைகளின் தேவைகளைப் பற்றிய கருத்துக்களை பெற்றோர்களிடம் நுட்பமான முறையில் வழங்குவார். மேலும், இந்த தேவைகளைக் கருத்தில் கொண்டு தகுந்த முடிவுகளை எடுக்க பெற்றோர்களுக்கு உதவுவார்.



படி 1

### சேர்க்கை மற்றும் மதிப்பீடு அமர்வு

- முதல் ஆலோசனை அமர்வு சேர்க்கை மற்றும் மதிப்பீடு அமர்வு எனப்படும்.
- ஒவ்வொரு தரப்பினர்க்கும் என்ன முக்கியம், எதிர்காலத்திற்கான அவர்களின் திட்டங்கள், அவர்களின் கவலைகள் மற்றும் நலன்கள், மற்றும் விவாகரத்தால் அவர்களின் பிள்ளை/பிள்ளைகள் எவ்வாறு பாதிக்கப்படலாம் என்பதை சீஎஃப்எஸ் மதிப்பீடு செய்து கண்டறிவார்.
- இந்த அமர்வின்போது சீஎஃப்எஸ் தரப்பினர்களின் தனிப்பட்ட, குடும்ப மற்றும் மனநல வரலாறு பற்றி மேலும் அறிய அவர்களை தனித்தனியாக சந்திக்கலாம்.



படி 2

### கூடுதல் ஆலோசனை அமர்வுகள்

- சீ.எஃப்.எஸ் பின்னர் தரப்பினர்களுடன் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட பின்தொடரும் ஆலோசனை அமர்வுகளுக்கு அவர்களின் வேறுபாடுகளைத் தீர்ப்பதில் மேலும் பணியாற்றுவதற்கும், தங்கள் பிள்ளை/பிள்ளைகளின் வாழ்க்கை மற்றும் பராமரிப்பு ஏற்பாடுகளுக்கு எது சிறந்தது என்பதில் ஒரு உடன்பாட்டை எட்டுவதற்கும் ஏற்பாடு செய்யலாம்.



படி 3

### உடன்படிக்கை வரைதல்/ மத்தியஸ்தருக்கு தெரிவித்தல்

- ஆலோசனையின்போது தரப்பினர்கள் வசிக்கும் ஏற்பாடுகள் மற்றும் இதர விஷயங்களையொட்டி ஒரு உடன்பாட்டை எட்ட முடிந்தால், சீ.எஃப்.எஸ் -இன் முன்னிலையில் ஒரு வரைவு உடன்படிக்கையைப் பதிவு செய்துக்கொள்ளலாம்.
- அப்படி ஒரு தரப்பினர், ஒரு சட்டப்பூர்வ வழக்கறிஞரால் பிரதிநிதிக்கப்பட்டால், அவர் அந்த வரைவு உடன்படிக்கையை அவரது வழக்கறிஞரிடம் கொண்டுச் செல்லலாம்.
- உடன்படிக்கையையொட்டி ஓர் ஒப்பந்த உத்தரவை வரைய, அந்த வழக்கறிஞர் மத்தியஸ்தத்தின்போது மத்தியஸ்தருடன் இந்த வரைவு உடன்படிக்கையை உறுதிப்படுத்த உதவலாம்.
- வரைவு உடன்படிக்கை இருந்தாலும் இல்லாவிட்டாலும், ஆலோசனையின்போது நடத்தப்பட்ட கலந்துரையாடல்களைப் பற்றி, சீ.எஃப்.எஸ் மத்தியஸ்தரிடம் தெரிவிப்பார்.
- எஞ்சியுள்ள கருத்து வேறுபாடுகள் மத்தியஸ்தத்தின் போது கையாளப்படும். (பக்கம் 9-ஐப் பார்க்கவும்).

# ஆலோசனை செயல்முறை (cont'd)

## கூடுதல் ஆதரவு



- ஆலோசனைக்குப் பின்பு மேலும் ஆதரவு தேவைப்படுகிறதா என்பதை ஆராய தரப்பினர்கள் மற்றும் அவர்களது பிள்ளை/பிள்ளைகளுடன் சீ.எஃப்.எஸ் செயலாற்றுவார்.
- அனைவரின் சம்மதத்துடன் சீ.எஃப்.எஸ், குடும்ப சேவை நிலையங்கள் (FSCs) மற்றும் விவாகரத்து ஆதரவு நல்கும் நிபுணத்துவ முகப்புகள் (DSSA) போன்ற தகுந்த சமூக மற்றும் சமூக சேவை நிறுவனங்களுக்கு அனைத்து தரப்பினரையும் பரிந்துரைக்கலாம்.
- கூட்டு பெற்றோர்களாக பிள்ளை வளர்ப்பு மற்றும் பிள்ளைகள் சார்ந்த பிரச்சினைகளுக்கு நீண்ட கால ஆலோசனை, கண்காணிக்கப்பட்ட பிள்ளை காணுதல் மற்றும் பரிமாற்றம், அத்துடன் விவாகரத்து பெறும் குடும்பங்களுக்கு ஆதரவளிக்க மற்ற திட்டங்களும் DSSAs வழங்குகின்றன.
- தரப்பினர்களின் சம்மதத்துடன், அவர்களின் குடும்பத்தினரை நன்கு புரிந்துக்கொண்டு கூடுதல் ஆதரவை வழங்க, சீ.எஃப்.எஸ் தரப்பினர்களும் அவர்களது பிள்ளை/பிள்ளைகளும் சந்தித்து வரும் எந்தவொரு மனநல நிபுணர்களைத் தொடர்பு கொண்டு அவர்களுடன் செயலாற்றலாம்.
- தரப்பினர்களுக்கும் அவர்களது பிள்ளை/பிள்ளைகளுக்கும் தீங்கு விளைவிக்கும் உடனடி ஆபத்து நிகழக்கூடும் சாத்தியம் உள்ளது என மதிப்பீடு செய்யப்பட்டால், சீ.எஃப்.எஸ் அக்குடும்பத்தின் பாதுகாப்பிற்காக தகுந்த நிறுவனங்களுக்கும் குடும்பத்தின் மற்ற உறுப்பினர்களுக்கும் தெரியப்படுத்தும்.



# மத்தியஸ்த செயல்முறை

சீ.எஃப்.எஸ்- இன் ஆலோசனைக் கூட்டத்திற்குப் பிறகு, தீர்கப்படாத விவாகரத்து அல்லது துணை விவகாரங்களைத் தீர்க்க தரப்பினர்கள் மத்தியஸ்தத்திற்கு செல்வார்கள்.

மத்தியஸ்தம், தரப்பினர்கள் வெளிப்படையாக பேச ஒரு பாதுகாப்பான மற்றும் ஆதரவுமிக்க சூழலை அமைத்து தருகிறது. இது, மத்தியஸ்தர் எனப்படும் ஒரு பொதுவான மூன்றாம் தரப்பினர் ஒருவரின் உதவியோடு நடத்தப்படுகிறது. அவர் சிறப்பு நியமனம் பெற்ற நீதிபதியாகவோ, FJC- யின் பணியாளராகவோ அல்லது தொண்டூழிய சட்ட நிபுணராகவோ இருக்கலாம்.



### குறிப்பு:

- அப்படி வழக்கு விசாரணைக்குச் சென்றால், இக்கட்டத்தில் மத்தியஸ்தராகச் செயல்படுபவர், மத்தியஸ்தராகவோ அல்லது வேறு எந்த பாத்திரத்திலோ ஆஜராக மாட்டார்.
- நீங்கள் மத்தியஸ்தக் கூட்டத்திற்கு உங்கள் வழக்கறிஞருடனோ அல்லது வழக்கறிஞர் இல்லாமலோ செல்லலாம். எனினும், ஒரு வழக்கறிஞரால், உங்கள் வழக்கின் பலத்தையும் பலவீனத்தையும் மதிப்பிட மட்டுமில்லாமல், மத்தியஸ்தத்தில் எழுப்பப்பட்ட முன்மொழிவுகள் நியாயமானவையா அல்லது/மற்றும் ஏற்றுக்கொள்ளத்தக்கவையா என்பதைப் பற்றி உங்களுக்கு அறிவுறுத்த முடியும்.

### மத்தியஸ்தம் செல்வதற்கு ஆலோசனைகள்

- மத்தியஸ்தத்திற்குச் செல்வதற்கு முன், நீங்கள் செவிமடுப்பதற்கு தயாராக இருப்பதை உறுதிப்படுத்துங்கள். உங்களுடைய சொந்த கருத்துக்களைப் பலமாக திணிக்காமல், அடுத்த தரப்பினரின் கருத்தினைக் கேட்க திறந்த மனப்பான்மையோடு இருங்கள்.
- உங்கள் பிள்ளை/பிள்ளைகளின் நலனை முதலில் கருத்தில் கொள்ளுங்கள். பிரச்சினைகளைப் பற்றி கலந்துரையாடும்போது, பிள்ளை/பிள்ளைகளுக்கு ஏற்ற சிறந்த தீர்வுக்கு வரவேண்டும் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.
- சட்ட ஆலோசனையைப் பெறுங்கள். விவாகரத்து மற்றும் பிரிந்து வாழ்வதற்கான நடவடிக்கைகள் மிகவும் சிக்கல் மிக்கவையாக இருக்கும். ஒரு வழக்கறிஞரால் உங்களை இதனுள் வழிகாட்ட முடியும்.

## என்ன எதிர்பார்க்கலாம்?

- ஆலோசனைக் கூட்டத்திலிருந்து தகவல் கிடைத்ததும் மத்தியஸ்தர், தரப்பினர்களிடமும் வழக்கறிஞர்கள் இருந்தால் வழக்கறிஞர்களிடமும், வழக்கில் உள்ள சட்ட அம்சங்களைப் பற்றி கலந்துரையாடுவார்.
- மத்தியஸ்தருடன், தரப்பினர்கள் ஒருவருக்கொருவரின் கண்ணோட்டத்தைப் புரிந்துகொள்ள மற்றும் பிள்ளை/பிள்ளைகள் தொடர்பான பிரச்சினைகள் அல்லது மற்ற சர்ச்சைகளைத் தீர்த்துக்கொள்ள, வழிகளை நாட ஊக்குவிக்கப்படுவார்கள்
- மத்தியஸ்தக் கூட்டத்தின்போது, தரப்பினர்களுடனும் அவர்களின் வழக்கறிஞருடனும் கூட்டு சந்திப்பிலோ அல்லது தனி தனியாக தனிப்பட்ட முறையில் மத்தியஸ்தர் பேசலாம்.
- ஒரு வழக்கில் தீர்ப்பதற்கு, சிக்கலான மற்றும் உணர்வுப்பூர்வமான பிரச்சினைகள் இருப்பதாக மத்தியஸ்தர் கண்டறிந்தால், அவர் இணை மத்தியஸ்தம் ஒன்றுக்கு ஏற்பாடு செய்வார். அதில், சீ.எஃப்.எஸ் இன்னொரு மத்தியஸ்தராக கலந்துகொள்வார்.
- இணை மத்தியஸ்தத்தின்போது, மத்தியஸ்தரும், சீ.எஃப்.எஸ்-உம், தரப்பினர்களின் பிள்ளை/பிள்ளைகளுடன் சந்திப்புகள் நடத்தலாம்

குறிப்பு:

- வெற்றிகரமான தீர்வு ஒன்றை எட்டுவதற்கு, ஒன்றுக்கும் மேலான மத்தியஸ்த சந்திப்புகள் தேவைப்படலாம்.





## மத்தியஸ்த செயல்முறை இவைகளுக்கு உதவியாக இருக்கும்:

### அ) விவாகரத்து

**விவாகரத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைத் தீர்க்க:**

- விவாகரத்து எதிர்க்கப்படுமா
- தரப்பினர்கள் என்னென்ன சாட்சியங்களை முன்வைப்பார்கள்
- விவாகரத்துக்கான காரணம், கோரூரிமையை மற்றும்/அல்லது எதிர் கோரூரிமையை அடிப்படையாகக் கொண்டதா

### ஆ) துணை விவகாரங்கள்

**விவாகரத்துக்குப் பின் நடைபெறும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக:**

- தரப்பினர்களின் பிள்ளை/பிள்ளைகளின் பிற்கால பராமரிப்பு ஏற்பாடுகள்
- வாழ்க்கைத் துணை மற்றும் பிள்ளை/பிள்ளைகளுக்கு பராமரிப்புத் தொகை வழங்குதல்
- திருமணமாகி ஒன்றாக வசித்த வீட்டை எவ்வாறு பங்குப் பிரிப்பது
- திருமணச் சொத்துக்களை எவ்வாறு பங்கிடுவது
- பிள்ளை/பிள்ளைகளுக்கும் மற்றும்/ அல்லது முன்னாள் வாழ்க்கைத் துணைக்கும் எவ்வளவு பராமரிப்புத் தொகை வழங்குவது.

குறிப்பு:

- விவாகரத்து மத்தியஸ்த சந்திப்பின் போது, உங்களுக்கு உங்கள் வாழ்க்கைத் துணையுடன் சமரசம் செய்ய விருப்பப்படுவதை மத்தியஸ்தரிடம் குறிப்பிடலாம். அப்படி உங்கள் வாழ்க்கைத் துணை இந்த சாத்தியத்தைப் பற்றி ஆராய தயாராக இருந்தால், நீதிமன்றம் இரு தரப்பினரையும் ஆலோசனைக்குச் செல்ல முன்மொழியலாம்.



# மத்தியஸ்தத்திற்குப் பிறகு நடப்பதென்ன?

அப்படி இரு தரப்பினர்களும் மத்தியஸ்தத்தின்போது அல்லது துணை மத்தியஸ்தத்தின்போது ஓர் ஒப்பந்தத்திற்கு வர **முடிந்தால், அவர்கள் ஒரு...**

### ...தீர்வை எட்டலாம்



விவாகரத்துக்கு, தரப்பினர்கள் ஒத்துக்கொள்ளும் நிபந்தனைகளை, நீதிபதி நீதிமன்ற ஆணையாகப் பதிவு செய்யலாம்.



பதிவு செய்தபின், தரப்பினர்கள் சட்டத்திற்கிணங்கி, ஒப்புக்கொண்ட நிபந்தனைகளின்படி நடந்துக்கொள்ள வேண்டும்.



பிற்காலத்தில், இரு தரப்பினர்களின் சூழ்நிலையில் ஏதாவது பெரிய மாற்றம் ஒன்று ஏற்பட்டு அவர்களுக்குள் உடன்படிக்கை இல்லையென்றால் ஆணையில் உள்ள நிபந்தனைகளை மாற்ற விண்ணப்பிக்கலாம்.

அப்படி இரு தரப்பினர்களும் மத்தியஸ்தத்தின்போது அல்லது துணை மத்தியஸ்தத்தின்போது ஒரு ஒப்பந்தத்திற்கு வர **முடியாவிட்டால், அவர்கள் ஒரு...**

### ...விசாரணைக்குச் செல்ல வேண்டும்



தரப்பினர்கள் சட்ட நடவடிக்கைகளுக்கு தயார் செய்ய தேவையான வழிமுறைகளை நீதிமன்றம் வழங்கும்.




இதைப்பற்றி மேலும் மற்றும் விவாகரத்தில் உள்ள மற்ற செயல்முறைகளைப் பற்றி, FJC-யின், விவாகரத்து சிங்கப்பூரில்: முக்கிய தகவல்கள் துண்டு பிரசுரத்தைப் பாருங்கள்.

# விவாகரத்தின்போதும் அதன் பிறகும் கூட்டு பிள்ளை வளர்ப்பு சம்பந்தமான உதவிக் குறிப்புகள்

பிரிந்து வாழும் செயல்முறையின்போது, பிள்ளைகள் பெரும்பாலும் உளவியல் ரீதியாகவும், உணர்வுப்பூர்வமாகவும் பாதிக்கப்படுகின்றனர். மாற்றத்தையொட்டி, அவர்கள் மனக்கலக்கம் மற்றும் கவலை அடையலாம். உங்கள் பிள்ளைகளின் நல் வாழ்வைப் பாதுகாக்க, நீங்களும் இணை பெற்றோரும் நடவடிக்கைகள் எடுப்பது முக்கியம்.

1. யார் மீதும் பழி சுமத்தாமல், பிள்ளை/பிள்ளைகளோடு அமர்ந்து அவர்களிடம் விவாகரத்தைப் பற்றி ஒரு எளிய விளக்கத்தை எடுத்துக் கூறுங்கள். பிரிவுக்குப் பிறகும், அவர்களை நீங்கள் இருவரும் பராமரிப்பீர்கள் மற்றும் நேசிப்பீர்கள் என்று சொல்லுங்கள்.
2. ஒருவருக்கொருவரைப் பற்றி நீங்கள் என்ன அபிப்பிராயம் கொண்டிருந்தாலும், இணை பெற்றோருடன் பிள்ளை/பிள்ளைகளை வளர்க்க ஒத்துழையுங்கள். இது, பிள்ளைகள் இரு பெற்றோரிடமும் நேரத்தைக் கழிக்கவும், பராமரிப்பைப் பெறவும் இடமளிக்கும்.
3. பிள்ளை/பிள்ளைகளின் நல் வாழ்வுக்காக, இணை பெற்றோருடன் பொறுப்பைப் பகிர்ந்து, இணைந்துச் செயலாற்றுங்கள்.
4. இணை பெற்றோரின் அந்தரங்கத்தன்மையை மதியுங்கள் மற்றும் பிள்ளை/பிள்ளைகள் தொடர்புடைய பிரச்சினைகளை அவர்களிடம் தெரிவிக்க ஒரு நட்பார்ந்த வழியை வளர்த்துக்கொள்ளுங்கள்.
5. நீங்களும் இணை பெற்றோரும் கோபத்திலிருந்தால், ஒருவர் மற்றொருவர் மீது பிள்ளை/பிள்ளைகள் மீது பழி சுமத்துவதைத் தவிர்த்துவிடுங்கள்
6. உங்கள் பிள்ளை/பிள்ளைகளிடம் ஒருவரை ஒருவர் எதிர்மறையாகப் பேசுவதை நீங்களும் இணை பெற்றோரும் தவிர்க்க வேண்டும்.
7. உங்கள் பிள்ளை/பிள்ளைகளை இணை பெற்றோருடன் வாழ அனுப்பப்போவதாக மிரட்டுவதைத் தவிர்த்துவிடுங்கள்.
8. பிரிதலுக்கு அவர்கள் காரணமல்ல என்று உங்கள் பிள்ளை/பிள்ளைகளுக்கு நம்பிக்கையளியுங்கள். அவர்களின் உணர்வுகளைப் பற்றி பேச உங்கள் பிள்ளை/பிள்ளைகளுக்கு ஊக்கமூட்டுங்கள். இரு பெற்றோரையும் தொடர்ந்து நேசிப்பதற்கும் காணுவதற்கும் அவர்களுக்கு அனுமதி அளியுங்கள்.
9. விவாகரத்தினால் ஏற்படும் வாழ்க்கை மாற்றங்களுக்கு உங்கள் பிள்ளை/பிள்ளைகளைத் தயார் படுத்துங்கள்.



# பயனுள்ள தொடர்புகள்

விவாகரத்துச் செயல்முறையின்பொழுது உங்களுக்கு உதவி தேவைப்பட்டால் கீழ்க்காணும் ஆதரவுத் திட்டங்களும், நிறுவனங்களும் உங்களுக்கு உதவலாம்.

## உங்களுக்கு தேவை ஆலோசனைச் சேவைகளா அல்லது கட்டாயப் பெற்றோர் திட்டமா?

**தொடர்பு கொள்ளவும்: விவாகரத்து ஆதரவு நல்கும் நிபுணத்துவ முகப்புகள் (DSSAs)**

https://www.msf.gov.sg/Divorce-Support/Divorce-Support/Divorce-Support-Specialist-Agencies/Pages/DSSA-Locations.aspx

## உங்கள் நிலைமை தொடர்பாக முன்னோட்ட சட்ட ஆலொசனை நாட விரும்புகிரீர்களா?

**தொடர்பு கொள்ளவும்: சட்ட ஆலோசனை வழங்கும் நிலையங்கள் (Legal Clinics)**

**Walk-in Legal Clinic @ Community Justice Centre**
1 Havelock Square, Basement 1, State Courts Complex, Singapore 059724
Tel: 6557 4100

சட்டக் கழகத்தால் வழங்கப்படும் இலவச சமூக சட்ட ஆலோசனை நிலையங்கள்
சட்ட இலவச சேவைகள் நேரடி தொலைபேசியில் அழைத்து, பின் வரும் சட்ட அறிவுரை வழங்கும் நிலையங்கள் ஒன்றில் , உங்களுக்கான சந்திப்பு நேரத்தை உறுதிப்படுத்துங்கள்: 6536 0650

- North West District
  (Near Woodlands MRT Station)
  900 South Woodlands Drive, #06-13,
  Woodlands Civic Centre, Singapore 730900
  இயங்கும் நேரம்: திங்கள் (மாலை 7.30 விருந்து இரவு 9.30 வரை)
- South East District
  (7 minutes walk from Paya Lebar MRT Station)
  Geylang Wisma Serai, 1 Engku Aman Turn,
  #03-02, Singapore 408528
  இயங்கும் நேரம்: திங்கள் (மாலை 7 விருந்து இரவு 9 வரை)
- South West District
  (Near Jurong East MRT Station)
  The JTC Summit, 8 Jurong Town Hall Road,
  #26-06, Singapore 609434
  இயங்கும் நேரம்: புதன் (மாலை 7 விருந்து இரவு 9 வரை)
- Central Singapore District
  (Near Toa Payoh MRT Station)
  490 Toa Payoh Lorong 6, #07-11,
  HDB Hub via Biz Three Lift Lobby 1,
  Singapore 310490
  இயங்கும் நேரம்: வியாழன் (மாலை 7 விருந்து இரவு 9 வரை)

*சிங்கப்பூரில், மற்ற ஆலோசனை வழங்கும் நிலையங்கள் உள்ளன. ஆலோசனை வழங்கும் நிலையங்களின் முழு பட்டியலை சட்டக் கழக இணையத்தளத்தில் காணலாம்: https://www.lawsociety.org.sg/our-community/pro-bono-services/*

**ஒருமுறை, 20 நிமிட ஆலோசனை பெறலாம். 6 மாதத்திற்கு செல்லத்தக்கது* — 

**ஒருமுறை, 20 நிமிட ஆலோசனை பெறலாம். 6 மாதத்திற்கு செல்லத்தக்கது*

**தொடர்பு கொள்ள: தனியார் வழக்கறிஞர்கள்**
தனியார் வழக்கறிஞர்கள் பட்டியலைக் கீழ்க்காணும் இணையத்தளத்தில் காணலாம்: www.mlaw.gov.sg/eservices/lsra/search-lawyer-or-law-firm/

## வழக்கறிஞர் பிரதிநிதித்துவம் உங்களுக்குத் தேவைபடுகிறது, ஆனால் உங்களால் ஒரு வழக்கறிஞரை நியமிக்க வசதியில்லையா?

**தொடர்பு கொள்ளவும்:**
**சட்ட உதவி இலாக்கா**
45 Maxwell Road, #07-11, The URA Centre
(East Wing), Singapore 069118
தொலைபேசி ண்: 1800-CALL-LAW
(1800 2255 529)
இயங்கும் நேரம்
திங்கட்கிழமையிலிருந்து
வெள்ளிக்கிழமை வரை: காலை
8.30 லிருந்து மாலை 5 வரை
வார இறுதி மற்றும் பொது விடுமுறைநாட்களில்
மூடப்பட்டிருக்கும்

சட்ட உதவி நாட விருப்பம் உள்ளவர், வசதித் தேர்வாய்வு மற்றும் தகுதித் தேர்வாய்வில் திருப்த்தி படுத்த வேண்டும். வசதித் தேர்வு மற்றும் தகுதித் தேர்வுக்கான மேல் விவரங்கள், சட்ட உதவி இலாக்கா இணையத்தளத்தில், கிடைக்கும்.
www.mlaw.gov.sg

சட்ட உதவி பெற, நீ ங் கள் தகுதியானவரா என்பதை சட்ட உதவி இலாக்காவால் நிர்ணையிக்க முடியும். அதனால், உங்கள் கணிப்பு மற்றும் இணையத்தளத்தில் கிடைத்த விவரப்படியும் நீங்கள் தகுதியற்றவர் என் று நீங்கள் கருதினாலும் கூட, சட்ட உதவி இலாக்காவுக்கு வருகை புரிய நீங்கள் சந்திப்பு முன் பதிவுச் செய்துக்கொள்ளலாம்.

## வழக்கறிஞர் இல்லாமல், நீங்களாகவே சுயமாக வழக்காடுகிறீர்கள் மேலும் ஆவணங்களை நீங்களே சமர்பிக்க தயாராக உள்ளீர்களா?

**தொடர்பு கொள்ளவும்:**
**CrimsonLogic Service Bureau**
133 New Bridge Road #19-01/02, Chinatown Point
Singapore 059413
தொலைபேசி எண்: 6538 9507
இயங்கும் நேரம்
திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை: காலை 8.30-லிருந்து மாலை 5.00 வரை
சனிக்கிழமை: காலை 8.30 லிருந்து மாலை 12 வரை
ஞாயிற்றுக்கிழமை மற்றும் பொது விடுமுறைநாட்களில் மூடப்பட்டிருக்கும்

## நீங்கள் சுயமாக வழக்காடுகிறீர்கள், ஆனாலும் நீதிமன்ற செயல்முறை தொடர்பாக உங்களுக்கு உதவி தேவைப்படுகிறதா?

**தொடர்பு கொள்ளவும்: சமூக நீதி மையம் (CJC)**

தனிநபர் வழக்காடுநர் நண்பர் (FLIPs)
FLIPs என்பவர்கள், தனிநபர் வழக்காடுநருடைய உணர்ச்சிக்கு ஆதரவு வழங்கி, அடிப்படை நீதிமன்ற நடைமுறைப்பற்றி வழிக்காட்டும் தொண்டூழியர்கள். ஆயினும், அவர்கள் வழக்கறிஞர் இல்லாததினால் , உங்களுக்கு எந்த வித சட்ட ஆலோசனையும் வழங்க இயலாது.

அடிப்படை நீதித்திட்டம் (PJP)
உங்களுக்கு அடிப்படை சட்ட ஆலோசனை வழங்குவதோடு ஒரு நிலையான கட்டணத்தில் உங்கள் சர்ச்சைக்குத் தீர்வு காண்பிக்கும் ஒரு வழக்கறிஞரை, அடிப்படை நீதித்திட்டம் (PJP), உங்களுக்கு வழங்குகிறது. வழக்கறிஞர், உங்களுடன் சேர்ந்து, தீர்வுக் காண்பதற்கு பேச்சுவார்த்தை நடத்துவார். அவர் மத்தியஸ்தம் போன்ற மற்றவகையிலான சர்ச்சைத் தீர்மான முறைகளைப் பரிந்துரைப்பார்.

மேல் விவரங்களுக்கு, கீழ்க்காணும் சமூக நீதி மையத்திற்குச் (CJC) செல்லுங்கள்:

- 1 Havelock Square, Basement 1, State Courts Complex, Singapore 059724
- Level 3, Family Justice Courts
  Tel: 6557 4100

இத்தகைய முகப்புகளை நீங்கள் அணுக விரும்பினால் , அன்புக்கூர்ந்து உரிய தொலைபேசி எண்களை அழைக்கவும், அல்லது அவற்றின் இணையத்தளங்களிலிருந்து நடப்பிலுள்ள இயங்கும் நேரத்தை முன்பாகவே பார்த்து அறிந்துக்கொள்ளவும்.



This page is intentionally left blank

This page is intentionally left blank



## இந்த வழிகாட்டியைப் புரிந்துக்கொள்ள

**உறுதிமொழி ஆவணம்:**
உங்கள் வழக்கு சார்ந்த உண்மைகளை, எழுத்து மூலமாக முறைப்படி விவரிக்கும் பத்திரம்

**துணை விவகாரங்கள்:**
பிள்ளை சம்மந்தமான, முக்கிய முடிவுகள் எடுக்கும் உரிமை, பேணுதலுக்கான உரிமை, காணும் உரிமை மற்றும் வாழ்க்கைத் துணைக்கும் பிள்ளைக்குமான பராமரிப்புத் தொகை அல்லது திருமணச் சொத்துப் பகிர்வு ஆகியவை துணை விவகாரங்களாகும்

**வழக்கு சந்திப்பு:**
வழக்கை மேற்கொண்டு எப்படி சிறப்பாக கையாள்வது என்பது குறித்து நீதிமன்றம் தரப்பினர்கள் மற்றும்/அல்லது வழக்கறிஞர்களோடு கூடும் ஒரு சந்திப்பு

**இறுதி தீர்ப்புச் சான்றிதழ்:**
நீதிமன்றம், அதனுடைய தீர்ப்பை வழங்கியுள்ளது என்பதை நீதிமன்ற பதிவாளர், நீதிமன்ற முத்திரையிட்டு வழங்கும் சான்றிதழ்

**சி. எஃப் .ஆர்.சி(CFRC):**
பிள்ளை நலனை மையப்படுத்தி தீர்வுக்காணும் நிலையம்

**சி எஃப் எஸ்:** நீதிமன்ற குடும்ப நிபுணர், ஒரு மனநல நிபுணர்

**ஒப்புதல் உத்தரவு:**
துணை மற்றும் இதர விவகாரங்களையொட்டி எழுப்பப்பட்ட எந்தவொரு சர்ச்சைக்குரிய பிரச்சினைகளைத் தீர்த்த பின்பு, தரப்பினர்களின் சம்மதத்துடன் பதிவுச்செய்யப்படும் நீதிமன்ற ஆணை

**கூட்டு பெற்றோர்களாக பிள்ளை வளர்ப்பு:**
பிள்ளையின் தேவையை சந்திப்பதற்கு தேவைப்படும் ஆதரவு மற்றும் வளங்களை வழங்கும் நோக்கத்துடன், முக்கியமான பராமரிப்பாளர்களுக்கிடையே இருக்கும் பிள்ளை வளர்ப்பு கூட்டுமுயற்சி

**எதிர் கோரிக்கை வாதம்:**
எதிர்வாதி தனது சாட்டுரையின் அடிப்படையில் விவாகரத்துக்கு கோரிக்கையிடும் வாக்குமூலம்

**எதிர்வாதியின் வாதம்:**
விவாகரத்து கேட்கும் வாதியின் கூற்றை மறுக்கும் எதிர்வாதியின் வாக்குமூலம்

**எதிர் கோரிக்கையை மறுக்கும் வாதம்:**
எதிர்வாதியின் கோரிக்கயை மறுக்கும் வாதியின் வாக்குமூலம்.

**எதிர்வாதி:** விவாகரத்து தொடரப்பட்டுள்ளது என்பதைக் குறிக்கும் சட்டப்படியான ஆவணங் களைப் பெறும் வாழ்க்கைத் துணை

**டி எஸ் எஸ் எ:** விவாகரத்து ஆதரவு நல்கும் நிபுணத்துவ முகப்புகள்

**எஃப்டிஆர்:** நீதிமன்றத்தின் தீர்ப்பளிப்பிற்கு மாற்றாக தலையீடு தேவைப்படும் காரியங்களுக்கு, மத்தியஸ்தம் மற்றும் ஆலோசனையைக் கையாளும் பயிற்சி பெற்ற, அர்பணிப்புணர்வுமிக்க நீதிபதிகள் மற்றும் அலுவலர்களான மத்தியஸ்தர்கள் மற்றும் மனநல நிபுணர்களைக் குடும்ப நீதிமன்றத்தின் குடும்ப சர்ச்சைத் தீர்வு பிரிவு கொண்டுள்ளது

**எஃப்டிஆர் சந்திப்பு:**
ஆலோசனை மற்றும் / அல்லது மத்தியஸ்தத்தை நிர்வகிக்க அல்லது ஒரு வழக்கின் மேலும் முன்னேற்றத்திற்கான வழிகாட்டுதல்களை வழங்க எஃப். டி. ஆர் பிரிவால் கூட்டப்பட்ட தரப்பினர் மற்றும்/ அல்லது வழக்கறிஞர்களின் கூட்டம்

**எஃப்ஜேசி:**
குடும்ப நீதிமன்றங்கள்

**ஃப் எஸ் சி:**
குடும்ப சேவை நிலையம்

**இடைக்காலத் தீர்ப்பு:** இது விவாகரத்துக்கான ஒரு தற்காலிகத் தீர்ப்பாகும். 3 மாதங்களுக்கு அல்லது அதற்கும் கூடுதல் காலத்திற்குப் பிறகோ, துணை விவகாரங்கள் தீர்வுக் கண்ட பிறகோ, விவாகரத்துக்கான தீர்ப்பு உறுதியாக்கப்படும்

**நீதிபதி-மத்தியஸ்தர்:**
மத்தியஸ்தம் நடத்தும் ஒரு நீதிபதி

**நீதிமன்ற அனுமதி:**
ஒரு நடவடிக்கை எடுக்க நீதிமன்றச் சம்மதத்தை பெறுதல். இல்லையெனில், நடவடிக்கை எடுக்க அனுமதியில்லை

**மத்தியஸ்தம்:**
தரப்பினர்களின் சம்மதத்துடன் அவர்களுடைய பிரச்சினையில் தலையிட்டுத் தீர்வுக் காணுதல்

**மத்தியஸ்தர்:**
மத்தியஸ்த செயல்முறையில் ஒரு பொதுவான மூன்றாம் தரப்பினர். அவர் சிறப்பாக நியமிக்கப்பட்ட நீதிபதியாகவோ, FJC யின் அலுவலராகவோ அல்லது தொண்டூழிய சட்ட நிபுணராகவோ இருக்கலாம்

**எம் ஒ ஏ (MOA):** எதிர்வாதி நீதிமன்றத்தில் ஆஜராகுவதைப் பதிவுச் செய்யும் ஆவணமாகும்

**எம் பி பி (MPP):**
கட்டாயமான பெற்றோர் பிள்ளை வளர்ப்புத் திட்டம்

**எஸ் எஃப் (MSF):** சமூதாய குடும்ப மேம்பாட்டு அமைச்சு.

**வழக்கமான விவாகரத்து தடம்:** தரப்பினர்கள் எல்லா விவாகரத்து மற்றும் துணை விவகாரங்களைச் சம்மதிக்காத வேளையில்

**நீதிமன்ற உத்தரவு:**
ஒருவர் செய்யக் கூடியவை, செய்யக்கூடாதவற்றை விவரிக்கும் நீதிமன்ற ஆணை

**தரப்பினர்கள்:** பெற்றோர் மற்றும் தாத்தா பாட்டிமார்கள் போன்ற, விவாகரத்து, பிரிவு மற்றும் பிள்ளை விவகாரங்களில் ஈடுபட்டிருக்கும் வெவ்வேறு நபர்கள்

**வாதி:** விவாகரத்துக் கேட்கும் வாழ்க்கைத் துணை

**பதில்:** எதிர்வாதி தனது தற்காப்பு வாதத்தை எடுத்துரைத்தப் பிறகு, வாதி கூறும் பதில்

**எளிதாக்கப்பட்ட விவாகரத்து தடம்:**
தரப்பினர்கள் எல்லா விவாகரத்து மற்றும் துணை விவகாரங்களுக்குச் சம்மதிக்கும் வேளையில்

FAMILY JUSTICE COURTS

SINGAPORE